வெளிக்காட்டி வைத்துள்ளேன்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் -

''எனது அலுவலகத்திலுள்ள துலாம்பரமான ஓர் இடத்திலும் காணியில் உள்ள துலாம்பரமான ஓர் இடத்திலும் காட்சிப்படுத்தப்பட்ட பதாகையொன்றில் காணியின் அட்டவணை உட்பட அறிவித்தலின் உள்ளீடுகளை ............ ஆம் ஆண்டு ......... மாதம் ............ ஆந் நாளிலிருந்து ............ ஆம் ஆண்டு .............. மாதம் .......... ஆந் நாள்வரை வெளிக்காட்டி வைத்துள்ளேன் என்பதுடன் அத்தகைய காணியிலும் அத்தகைய காணிக்கு அருகாமையில் உள்ள ஏதேனும் பொது இடத்திலும் ஒலிபெருக்கியொன்றைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட பகிரங்க அறிவித்தல் என்ற வகையாக வாய்மொழி மூலமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளேன்.''; அத்துடன்

(2) ''நிலஅளவையாளரின் அறிக்கைப்படிவம்'' என்னும் தலைப்பைக் கொண்டுள்ள 18 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், அதன் (vi) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

''(vi) சமுகமாயிருந்த திறத்தவர்கள் மற்றும் அவர்களின் உரிமைக்கோரிக்கைகளின் தன்மை;''.

ஐயத்தைத் தவிர்த்தல்

**16**. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவுக்கு இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தங்கள் முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின்கீழ் தொடுக்கப்பட்டு இச்சட்டம் நடைமுறைக்கு வரும தேதியன்று முடிவுறாதுள்ள அல்லது நிறைவுசெய்யப்படாதுள்ள ஏதேனும்

